**14.03.2023**
**OS 450/2019**
**வா.சா.1 ஜெயலெட்சுமி**
**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

அம்மாபிள்ளை வகையறா வழக்கிடை சொத்தை பிரதிவாதிகளுக்கு விற்ற நிலையில் அம்மாபிள்ளை வகையறாவை நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் வழக்கு நிலைகத்தக்கதல்ல என்றால் சரியல்ல. உயிலை சர்வலிங்ககோனாரும் அவரது மனைவி அழகம்மாளும் சேர்ந்துதான் உயிலை எழுதி வைத்துள்ளனர். அந்த சொத்தை சர்வலிங்ககோனாரும் அவரது மனைவி அழகம்மாளும் சேர்ந்துதான் கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். அதனால் அந்த சொத்து சர்வலிங்ககோனாரும் அவரது மனைவி அழகம்மாளும் சேர்ந்துதான் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பின்னிட்டு குடும்பத்திற்குள் பிரச்சினை வந்துவிடக் கூடாது என்றுதான் உயிலில் சொல்லப்பட்டுள்ளது. அந்த உயிலில் ஆண், பெண் சந்ததிகள் எங்களுக்கு கிடையாது என்று எழுதப்பட்டுள்ளது. அந்த உயிலில் என் பெயரை அன்புமகள் என்றுதான் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். உயிலை எழுதும்போது நான் அன்புமகளாத்தான் இருந்தேன், பின்னிட்டு சுவிகார மகளாகிவிட்டேன். மேற்படி உயிலில் சர்வலிங்ககோனாரும் அவரது மனைவி அழகம்மாளும் சேர்ந்து மேற்படி உயிலை ஆயுளுக்குள் ரத்து செய்ய அதிகாரம் இருப்பதாக கண்டு எழுதப்பட்டுள்ளது. எங்களில் யாரேனும் ஒருவர் காலமாகிவிட்டால் காலம் ஆகாதவர் அவர் ஆயுள் வரை இதில் கண்ட சொத்துக்களை பந்தக பாராதீனம் செய்யாமல் அனுபவித்து வர வேண்டியது, காலம் ஆகாத மற்றொருவர் காலமானபின் மேல்கண்ட ஆறு நபர்களும் என கண்டு மேற்படி உயில் வாசகங்கள் எழுதப்பட்டுள்ளது. உயில் எழுதப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சாட்சி ஓரளவிற்குத்தான் தெரியும் என்று சொல்கிறார். எனக்கு இந்த உயிலை பற்றி எப்போது தெரிய வந்தது என்றால் எனது அம்மா இறந்த பின்னிட்டு, சர்வலிங்ககோனார் சொன்னார். அப்போது அந்த இடத்தில் உயிலை வாங்கி படித்து பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். உயிலை படித்து பார்க்கும் விவரம் நான் சர்வலிங்ககோனார் வீட்டில் இருக்கும்போது நடைபெற்றது. நான் சர்வலிங்ககோனாரிடம் உயில் எழுதியது சம்மந்தமாக சொத்துக்களை எவ்வாறு பிரிப்பது சம்மந்தமாக நான் கேட்டுக்கொள்ளவில்லை. உயில் எழுதப்படும்போதும், அதை ரத்து செய்த போதும் எனக்கு திருமணமாகி உரிய வயதடைந்தவராக இருந்தேன். உயில் எழுதும்போது மற்ற நபர்களுக்கு திருமணமாகவில்லை. உயில்படி அவர்களை மைனர் என்று காட்டப்பட்டுள்ளது. உயில் எதற்காக எழுதப்பட்டது என்ற

விவரம் எனக்குத் தெரியாது. உயில் எதற்காக ரத்து செய்யப்பட்டது என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால் அவர் இஷ்டப்படி முதலில் எழுதி வைத்தார், பின்னிட்டு பிள்ளைகள் இல்லாத காரணத்தினாலும் அவர் இஷ்டப்படி ரத்து செய்தார். உயில் ரத்து பத்திரத்தில் சிலர் உயிலுக்கு மாறாக நடப்பதால் என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் சரிதான். முதல் உயிலில் சுவிகார மகள் என்று சொல்லப்படவில்லை, உயில் ரத்து பத்திரத்தில் சுவிகார மகள் என்று சொல்லப்பட்டுள்ளது. உயில் ரத்து பத்திரமானது சர்வலிங்ககோனாரை என்னுடைய கட்டுப்பாட்டில் வைத்து, மிரட்டி அவருடைய விருப்பம் இல்லாமல் எழுதி வாங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால்தான் மேற்படி உயில் ரத்து பத்திரத்தை மறைத்து வைத்துவிட்டு, இதுநாள் வரை வெளியில் சொல்லவில்லை என்றால் அதை மறைத்து வைத்து நான் என்ன செய்யபோகிறேன். உயில் ரத்து பத்திரம் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் கொஞ்ச நாட்கள் கழித்து தெரியும். எந்த வருடத்திலிருந்து சர்வலிங்ககோனாரும், அவருடைய மனைவி அழகம்மாளும் எனக்கு திருமணம் நடந்ததிலிருந்தே என்னுடன் இருந்து வந்தார்கள். நான் அவர்கள் வீட்டில் இருந்து வந்தேன். அவ்வாறு ஒரே வீட்டில் இருந்து வந்ததால் சர்வலிங்ககோனாரும், அவருடைய மனைவி அழகம்மாளும் என்ன செய்து வந்தார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியும் என்றால் ஒரு சில விவரங்கள் தெரியும். பத்திர அலுவலகத்திற்கு சென்று பத்திரத்தை பதிவு செய்த விவரம் எனக்குத் தெரியாது. நான் சொல்வதுபோல நான் சர்வலிங்கோனார் வீட்டில் இருக்கவில்லை என்றும், தற்போது வழக்கிற்காக இருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பில் நான் சுவிகார மகள் என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சர்வலிங்ககோனாரின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அப்போது அந்த நடவடிக்கைகள் இல்லை, கிராம நிர்வாக அலுவலரிடம் சான்று வாங்கி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் அவ்வாறான கிராம நிர்வாக அலுவலரிடம் சான்று எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து நான் வைத்து அனுபவித்து வரும் சொத்திற்கு வடக்கே உள்ளது. சர்வலிங்ககோனார் ஆயுளுக்குப் பின் பூசாரி வகையறாதான் அனுபவித்து வந்தார்கள். பின்னிட்டு தற்போது இராதாகிருஷ்ணன் பெயரில் பட்டா உள்ளது. நான் இந்த வழக்கை போடும்வரை எதிர் தரப்பிடம் ஏன் சொத்துக்களை மாறிமாறி விற்கிறீர்கள் என்று நான் கேட்கவில்லை. விற்றது எனக்குத் தெரியாது. தெரிய வந்த பின்னிட்டு நான் கேட்கவில்லை என்றால் நான் வழக்கு போட்டுள்ளேன். நான் வழக்கு

போட்ட பின்னிட்டும் இராதாகிருஷ்ணன்தான் தற்போதும் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கு அனைத்து விவரங்களும் நன்கு தெரியும் என்றும், வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1989லிருந்து 2019 வரை சொத்துக்கள் கிரையம் வாங்கியுள்ளதும், ஒவ்வொரு கிரையம் வாங்கும்போது பட்டா தொடர்ச்சியாக மாற்றப்பட்ட விவரம் எனக்குத் தெரியும் என்றால் தெரியாது. 30 வருடமாக சொத்தை அனுபவித்து வருவதை தெரியும் என்று ஒத்துக்கொண்டால் வழக்கு பாதிக்கப்படும் என்பதால் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் 30 வருடத்திற்கு மேலாக எனக்கு தெரிந்தே அவர்கள் தொடர்ந்து அனுபவித்து வருவதால் பிரதிவாதிகளுக்கு அனுபவ பாத்தியம் சித்தித்துள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு இந்த பூசாரி கோனார் வகையறா யாராவது ஒருவர் குத்தகை கொடுத்துள்ளார் என்று சொல்வதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யாததாலும் இந்த வழக்கு நிலைகத்தக்கதல்ல என்றால் சரியல்ல. உயிலுக்கு மாறாக உயில் ரத்து செய்யப்பட்டுள்ளதால் அந்த உயில் ரத்து பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சர்வலிங்ககோனாருக்கு உயிலை ரத்து செய்யும் அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. சர்வலிங்ககோனாருக்கு உயிலை ரத்து செய்யும் எண்ணமே கிடையாது என்றால் சரியல்ல. நான்தான் சர்வலிங்ககோனாரை வலுகட்டாயமாக உயில் ரத்து பத்திரம் எழுத வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. முதல் உயில்படி இரண்டுபேர் சேர்ந்தால்தான் மேற்படி உயிலை ரத்து செய்ய முடியும் என்றும், தனிப்பட்ட ஒரு நபர் அதை ரத்து செய்ய முடியாது என்றால் சரியல்ல. வழக்கு காலதோஷத்தின்படி தள்ளுபடியாகத்தக்கது என்றால் சரியல்ல. எனக்கு கவனத்திற்கு வந்ததிலிருந்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் பொய்யான சங்கதிகளை சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடியாகத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம்:-S.கணேசன்
சார்பு நீதிபதி,
மேலூர்.